உ

கடவுள் துணை.

உடற்கூறு.

ஏலப்பாட்டு.

இஃது

தண்ணீர்க்குளம்,

குப்பனய்யங்காரால்

பார்வையிடப்பட்டு

பாக்குப்பேட்டை

பரமானந்தமுதலியாரவர்கள்

குமாரர்

மதுரைமுதலியாரால்

முத்தமிழ்விளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சித்தார்த்தி௵ மார்கழிமீ

உ

சிவமயம்.

உடற்கூறு

ஏலப்பாட்டு.

ஏலேலோஏலேலோ-தத்தெய்யா ... ... *
ஏலேலோஏலேலோ ... ... *

திருவாருமணிமார்பர்-திங்கள் சூடுஞ்சிதம்பர
ர்புதல்வர்- கருவாருங் கடல்கடந்து (தத்தெய்
யா) கச்சிநகர் தனிற்சேர்ந்தே - உருவான வு
ன்னருளைப் போற்றி பணிதினமும் ஓங்காரறீ
ங்கார வொளிபெற்று நின்று - கருவான நவ
கோணக் கடல்கடந் தப்பால் - காலதிசைநாத
த்தை போர்பலகையாக்கி- விரிவான வேதாந்
த விட்டகுறைபோர்க்கு- வெள்ளமருப்பேடா
ம் விநாயகனைமுன்னி, .. [ஏலேலோ] ...(க)

முக்கணனை யான்றொழுதேன் - மூதறா
ணக்கப்ப லோட்டும்வகை - இக்கெனவே யெ
ட்டெழுத்தை (தத்தெய்யா) சேர்த்துமொரு
கப்பல்வைத்துச் - சுக்கானதற்கருகில் விஷ்ணு
வை வைத்துச் - சூத்திரப் பிர்ம்மாவை நடுக்க
ம்பமாக்கி - அக்கான ருத்திரனைச் சிங்கமாப்
பாவி - அணிநாடி யெழுபத்தீ ராயிரம்பூட்டி
த் - திக்கெட்டின் முப்பத் திரண்டுபாய் கட்டி
த் - திரண்ட தொண் ணூற்றாறு பீரங்கியேற்றி
[ஏலேலோஏலேலோ ... ... (உ)

ராகுவொடு கேதுவையும் - நடுக் கம்பத்து
ங்கக்காலாக்கி - பூகியென்ற நவக்கிரகம் (தத்
தெய்யா) ஒளிபெறவே காவல்வைத்து - பாகா
ணராசியைப் பரிவாகவைத்துப் - பகைநேசவு
ச்சநீ சாட்சியும் பார்த்து - வாகான சுவாதியி
லெட்டா மிடத்தில் - வருமுச்ச மதனிலே சோ
திடம்பார்த்து - வேகமாகக்கப்ப லோட்டும்வ
கைகண்டு - மேதினியிற் சரக்குகளை யேற்றும்
வகைசொல்வேன் [ஏலேலோ ஏலேலோ] (ங)

ஆயுமெண்ணெண் கலைகளையும் - அறுபத்
து நாற்சாக்காச் - சாயாமற் கட்டிடவே (தத்
தெய்யா) சதாசிவனார் தாழுணாத்தார் - ஓயா
க்குண்டலி கல்லுப்பையேற்றி - ஒப்பானமா

ல்தேவ் கெந்தியொடுசேனம் - தாயான ஆஷிரு
ஜு சவுக்காரசுண்ணந்- தனிநாகலிங்கமொடு வ
ங்கமொடுருத்ரம் - மேவானபூரமொடு விஷநா
பிநுருசு - வெண்மதி நவாசார மிடையுடனே
யேற்றி......[ஏலேலோஏலேலோ]......(௪)

பாய்விரித்துக்கப்ப லோடுகையிற்-பதிதே
வர்வந்துநின்றார் - தூயநிறக்கலைமகளார் (தத்
தெய்யா) துலங்குமந்த கொத்தளத்தில் - மா
யாதபிரங்கி மாறுமலடித்து- மாறுத திருவை
யை மதித்தங்கே நின்றான்- சேயான பதமிரு
பத் தெட்டுமே வைத்துச் - செயலான புவன
நூற் றெட்டுமே காட்டிக்- காயா புரிக்கோட்
டை கப்பல் யானென்று- கம்பீச முத்திரை
யைக்காட்டியேவந்தேன்...[ஏலேலோ]..(௫)

பார்கடலிற் கப்பல் பாய்கையிலே - பாவி
யப்பெண் கண்டுவிட்டாள்- மேற்குமுகச்சுக்
கானை (தத்தெய்யா) வீரியமாய்த் தான்திரு
ப்பித் - தாக்கெட்டு மந்திரந் தானே செபித்
துத்- தனஞ்செயன் கத்திரிப் பாயையும் விரி
த்துத் - தூக்கனெறி கூர்மனெறி நாகன் சமா
னன் - செறியாத செபமதனைத் தொலைத்துத்
கேதன்னி - வாக்கானதசவாயு மூறுக்கிக்கொடி
போட்டு- வானேர்கண் காணவே மூழ்குதல்
லோசன்னை...... [ஏலேலோ] ...... (௬)

ரதமெச்சுமந் துரகமுட - னலங்கச்சேனைக்
னும் - பதாதைத்து கொடிதாங்கிப் - பானு
விடம்போகையிலே (தத்தெய்யா) அதிராத
சுழிமுனை மெய்யாய் முழங்க - ஆலோசனை
டெழுவர் கப்பிகளுமீர்க்க - மதிமந்திரி சாரதி
மாலோன்றிருப்ப மாறுமலெட்டெட்டுந்தட்
டி நீர்பாய - சதுரான ருத்திரன் கவுலிட்டழு
க்கத் - தனஞ்செயன் கப்பலது தாவிப்பறக்க
[ஏலேலோ] ... ... (எ)

மதிபிறையா லோட்டைகையில் - மகேசனார்
தாங்கண்டே - எதிராகச்சங்கிலியைத் (தத்தெ
ய்யா) எறிந்துமவர் மறிக்கலுற்றார் - குதியா
தமரக்கல் மோடமென் றெண்ணிக் - கூசாமல்
நீருவை தான்கேட்க வந்தார் - பதியாதவாசி
யைப் பிரணவத்தைக்காட்டப் - பாய்ச்சின சங்
கிலியைப் பயந்து மிழுத்தாரே - திதியாது
போச்சுதே யிவன்மார்க்க மென்று நிவாதாக்
காரி போய்வருவதறியோம் [ஏலேலோ] (அ)

பஞ்சவர்ணக் கொடி விரித்துப் பட்டணத்
திற் சேர்கையிலே - விஞ்சுபுகழ் மனோன்மணி
யாள் - விளக்கொளிம்பாற் றீபமிட்டாள் - ப
ஞ்சாக்ஷரத்தைப் பெருந் துண்டுவந்து - பாரந்
திருந்தானு மஞ்சாதே யென்றார் - தஞ்சமெ

ன்றெண்ணிச் சலாம்வாங்கிக்கொண்டு - சா
னெப்பீரங்கி யாயிரத் தெட்டுஞ் - எல்லையிந்த
தீபித்தமாலிமாரேற்றி - இசையால் சுக்கானு
பாருங்கணக்கன் - சொல்வழிதவறாத சுக்கானி
மாதா - சுக்கானி வேலைசெய்யத் தொண்ணூர்
இளாசு-வல்லருடன் பீரங்கி -பீரங்கிமேல்ஹரி
வாதாமலேலார் மேலோர் தாருமேகூடி - நல்ல
நாழிகைகேட்டு நங்கூரந் தூக்கி - நன்றாகஅந்
நூறு வேட்டுகளுந்தீர்த்து -ஒருமிக்கப்பதினு
று பாய்களைவிரித்து - ஓட்டினார் மேகமுட
னேடுதேகப்பல் ... ... *

ஏலேலோஏலேலோ-தத்தெய்யா........*

ஏலேலோஏலேலோ ... ...*

அஞ்சாச்சாக்கையத்துறையினிலிறக்கி பா
டினேன் திருவருளாற் பாடினேனே - ஏலே
லோஏலேலோ ... ...*

உடற்கூறு

ஏலப்பாட்டு

முற்றும்.